(7) கவன ஈர்ப்பு

செஞ்சியைச் சேர்ந்த திரு. சம்பத் என்பவரை வன்முறையாளர்கள் தீ வைத்துக் கொல்ல முயன்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் டாக்டர் கே. சமரசம், யா. சை. மு. யூசப், திருப்பூர் ஆர். மணிமாறன், இரா. தாமரைக்கனி, எம். கண்ணன், பி. கிருஷ்ணன், சின்னசேலம் மா. சுப்பிரமணியம், சி. ராமநாதன், எம். பெரியசாமி ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த செஞ்சி பீரங்கி மேட்டு தெருவைச் சேர்ந்த திரு. சம்பத் என்பவரை சில வன்முறையாளர்கள் மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்துக்கொளுத்தி அவரைக் கொல்ல முயன்றதால் அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்து மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார்கள். யாராவது ஒருவர் பேச வேண்டும். திரு. மணிமாறன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

"செஞ்சி பீரங்கிமேட்டு தெருவைச் சார்ந்த திரு. சம்பத் என்பவரை சில வன்முறையாளர்கள் மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்து கொளுத்தி அவரைக் கொல்ல முயன்றதால் அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்து" என்ற தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, செஞ்சி பீரங்கிமேடு பகுதியில் குமாரசாமி பிள்ளை தெருவில் திரு. சம்பத் வசித்து வருகிறார். செஞ்சி பீரங்கி மேடு பகுதியில் வசிப்பவர்கள் பெரும்பாலோர் தி. மு. க.-வைச் சேர்ந்தவர்கள். திரு. சம்பத், அ.இ.அ.தி.மு.க—வைச் சேர்ந்தவர். செஞ்சிக்கு அருகில் மட்டப்பாறையில் ஒரு பள்ளி திறப்பு விழா சம்பந்தமாக நடைபெற்ற சம்பவங்களில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு, வேணுகோபால் பயணம் செய்த கார் தாக்கப்பட்டதும், செஞ்சி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் தாக்கப்பட்டதும் 10.3.1979 அன்று நடைபெற்றுள்ளன. இவைகளைத் தொடர்ந்து தி. மு. க. வினரால் தனக்கு ஆபத்து நேரிடலாம் என்று கருதி 11.3.79 முதல் 26.3.79 வரை திரு. சம்பத் திருவண்ணாமலையில் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. 27.3.1979 அன்று அவர் செஞ்சிக்குத் திரும்பியுள்ளார் லட்சுமி தியேட்டர் தாக்கப்பட்டது சம்பந்தமான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை அடையாளம் காட்டியதற்கு திரு. சம்பத் காரணமானவர் என்ற சந்தேகத்தின்பேரில் அவர்

மீது எதிரிகள் குறியாக இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே அவரைக் கொல்லும் எண்ணத்துடன் மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்திருப்பதாகத் தெரிகிறது.

29.3.1979 அன்று இரவு அவர் தனது வீட்டின் முன்புறத் திண்ணையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்திருக்கின்றார். நள்ளிரவில் தனது சட்டை தீப்பற்றி எரிவதை உணர்ந்து தூக்கத்தினின்றும் எழுந்தார். அப்போது அருகாமையில் உள்ள முட்புதர்களினூடே அடையாளம் தெரியாத சிலர் ஓடுவதைப் பார்த்திருக்கின்றார். கீழே விழுந்து புரண்டு தீயை அணைக்க முயன்றுள்ளார். அவரது சத்தத்தைக்கேட்டு அருகிலிருந்தவர்கள் கூடி தீயை அணைக்க உதவினர். இருப்பினும் அவருக்கு இடது கையிலும் முதுகிலும் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் செஞ்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவ உதவி அளிக்கப்பட்டு, பிறகு கடலூர் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு மேற்கொண்டு சிகிச்சைக்காக அனுப்பப் பட்டுள்ளார். செஞ்சி மருத்துவமனையில் அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின்பேரில் செஞ்சி காவல்நிலைய குற்ற எண் 305/79-ல் இ. பி. கோ. 307-வது பிரிவின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இச் சம்பவம் சம்பந்தமாக, பீரங்கிமேடு பகுதியைச் சேர்ந்த திருவாளர்கள் கோதண்டராமன், மாணிக்கம், சிலம்பை கவுண்டர், ஜயராமன் ஆகிய நான்கு பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நான்கு பேர்களும் தி.மு.க. அனுதாபிகள் என்று தெரிகிறது.

வழக்கு புலன்விசாரணையில் உள்ளது. போலீஸ் பாதுகாப்பும் ரோந்தும் அதிகப்படுத்தப்பட்டு, தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நிலைமை அமைதியாக உள்ளது.

[முற்பகல் 11.30.]

திரு. ஆர் மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, நடக்கக் கூடாத ஒரு சம்பவத்தை நடத்திக் காட்டவேண்டு மென்ற பெருமுயற்சியில் ஈடுபட்டு அந்தப் பகுதியில் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பாத்திரமாக விளங்கிய சம்பத் என்ற அருமைத் தோழர், செஞ்சியில் நடைபெற்று முடிந்துவிட்ட அசம்பாவிதங்களுக்காக அந்த நிகழ்ச்சிக்கு வழக்குமன்றத்திற்குச் செல்வதற்காக காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு சாட்சியாக தான் இருப்பதாகச் சொல்லி அவர் தெரிவிக்கின்ற நிலைமைகள் உருவான பிறகு அவர் உயிரோடு இருக்கக்கூடாது என்ற கருத்தில் வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டிருக்கும நள்ளிரவு நேரத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து உயிரோடு கொளுத்துவதற்கு அவரை எழுப்பிய முயறசி மிகவும் கண்டிக்கத்தக்க காரியமாகும். இந்தப் பதட்டநிலை இன்றைக்கு முடிந்துபோன ஒன்றாக நிச்சயமாக இல்லை. நாட்டிலே சட்டம் கிடையாது. ஒழுங்கு கிடையாது என்று கூறுகிறவர்கள்....

1979 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; ஏதாவது விவரம் தேவையென்றால் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். மணிமாறன்: அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாக்கப்பட்டது என்பதை எடுத்துக் கூறி அதற்குப் பிறகு அரசினுடைய கவனத்திற்கு நான் இன்னொன்றையும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சம்பவம் நடைபெற்ற பிறகு 14ஆம் நாள் முரசொலிப் பத்திரிகையில் அந்த வேகத்தைத் தூண்டுகிற வகையில் வேறு உணர்ச்சியைத் தூண்டுகிற வகையில் செய்தியை வெளியிட்டிருப்பதையும் அரசு கவனத்தில் கொண்டு அங்கு பதட்டநிலை இன்னும் தொடர்ந்து இருக்கும் காரணத்தால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த உணர்வுகளின் அடிப்படையில் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்களே குறிப்பிட்டார்கள்—நடக்காததை நடத்திக்காட்டுபவர்கள் என்று. அதை வெளியில் மட்டுமல்ல, இங்கேயும் நடத்திக் காட்டு கிறார்கள் என்பது ஊரறிந்த விஷயம்.

திரு. இரா. தாமரைக்கனி: ஜனநாயக நாட்டில் பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. பல அரசியல் கொள்கைகள் இருக்கின்றன. ஆனால் கொள்கைக்கு கொள்கை மேடையில் பதில் சொல்வதற்கு மாறாக இப்படி அரசியல் வாதிகளுக்குப் பாதுகாப்பு இல்லாத அளவில் வீட்டில் தூங்கிக்கொண்டிருக்கும்போது பிடித்து எழுப்பி மண்ணெண்ணெய் ஊற்றி கொலை செய்ய முயற்சித்திருக்கிறார்கள். செஞ்சியில் பல அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைப் பழிவாங்க திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள், அதற்கு சென்னையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் காரணமாக இருக்கிறார்கள். ஆகவே, இதில் பலபேர் சம்பந்தப்பட்டிருப்பதால் அரசு இதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விசாரணைக் கமிஷன் அமைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; இதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி போலீசார் தீவிரமாக புலன் விசாரணை செய்துவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் அரசியல் கருத்துக்களுக்கு இடம் இருக்கவேண்டுமே தவிர அரசியலிலே மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்ற நிலைமை நிச்சயமாக எழக்கூடாது என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. புத்தியுள்ளவர்கள் புத்தியைத் தீட்டுகிறார்கள், கத்தியுள்ளவர்கள் கத்தியைத் தீட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய விளக்கங்களைச் சொல்லிப் பேசக் கூடாது. ஏதாவது கேள்வி கேட்கலாம். சுருக்கமாகக் கேளுங்கள். டாக்டர் சமரசம் ஒரு கேள்வி கேட்கலாம்.

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. சம்பத் எதிர்க்கட்சிக்காரர்களால் அன்றைய தினம் எந்த அளவிற்கு போட்டியால் பொறாமையால் காழ்ப்புணர்ச்சியால் பதவியிழந்து பவிசு இழந்து, பல் இழந்தவர்கள் அரசின் ஆதரவாளர்களாக இருக்கிறவர்களை பகடைக் காய்களாக ஆக்குகிறவர்கள், ஆகவே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எல்லோருக்கும் பாதுகாப்பு இருக்கிறது. அரசியலில் போட்டி இருக்கவேண்டுமே தவிர பொறாமை இருக்கக்கூடாது என்பதில் அரசு அக்கறையோடு உள்ளது.

(6) அறிக்கை அளித்தல்—(தொடர்ச்சி).

(ஆ) பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, 1973–74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கையில் (சிவில்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (ஏழாவது அறிக்கை) அளிக்கிறேன்.

(8) வரவு-செலவுத் திட்டம், 1979-80—(தொடர்ச்சி)

வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 1. நிலவரித் துறை

(ஆ) கோரிக்கை எண் 5. முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்

(இ) கோரிக்கை எண் 41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஈ) கோரிக்கை எண் 46. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

(உ) கோரிக்கை எண் 48. ஜமீன்தார்களுக்கு இழப்பீடு

*Thiru EKAMBARA REDDY: My Deputy Speaker Sir, I rise to speak on Demand No. 1 Land Revenue Department which has an outlay of Rs. 4,87,29,000 for tho year 1979-80 and also on demand No. 41 Relief on aceount of Natural Calamities.